# 1990 ජාතික හදිසි ගිලන්රථ සේවය
## தேசிய அவசர ஆம்புலன்ஸ் சேவை
## National Emergency Ambulance Service




**இலங்கை முன் மருத்துவமனை பராமரிப்பு சேவையின் பெருமைமிக்க பிரதிநிதியாகுங்கள்!**

தேசிய அவசர ஆம்புலன்ஸ் சேவை,மாநில சுகாதார மற்றும் ஊடக அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனமாகும். தற்போது நாடளாவிய ரீதியில் 322 அம்புலன்ஸ்களுடன் உயிர் காக்கும் பணியில் மிகவும் வெற்றிகரமாக ஈடுபட்டு வருகிறது.

**உயிர்காக்கும் பணியில் இணைய நீங்கள் தயாரா? அப்படியானால் எங்களோடு இணையுங்கள்.**

## அவசர மருத்துவ தொழில்நுட்பவியலாளர் (EMT)

### தகுதி

- 35 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.
- க.பொ.த உயர்தர பரிட்சையில் உயிரியல்/கணிதம்/வேளாண்மை ஆகிய பிரிவுகளில் தேர்ச்சி பெற்றிருத்தல் அல்லது, க.பொ.த உயர்தர பரிட்சையில் வணிகம்/கலை/தொழில்நுட்ப பிரிவில் தேர்ச்சி பெற்று உடற்கல்வி/தாதியர் (மருத்துவ) சேவை சார்ந்த படிப்பை படித்திருத்தல் வேண்டும்.
- ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல்.
- அவசர மருத்துவ சேவையில் முந்தைய அனுபவம் கூடுதல் தகுதியாகக் கருதப்படும்.
- BMI மதிப்பீடு 18.5 தொடக்கம் 24.9 க்கு உட்பட்டதாக இருத்தல்.
- பார்வைத்திறன் (Vision) 20/20-20/30 க்கு இடையில் இருத்தல்.

கவனத்திற்கு: விண்ணப்பதாரர்கள் அடிப்படை திறன் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து தேசிய அவசர ஆம்புலன்ஸ் சேவையால் வழங்கப்படும் டிப்ளோமா சான்றிதழ் மற்றும் சிறப்புப் பயிற்சிக்குப் பிறகு, 3 வருட சேவை காலத்திற்கு பின் பல வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் காத்திருக்கும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

**நீங்களும் மேல் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச தகுதிகள் உடையவரானால், உங்கள் சுயவிபரத்தை careers@1990.lk அல்லது தபால் மூலம் 2025.05.25 அன்று அல்லது அதற்கு முன் அனுப்பவும்.**

1990 சுவ செரிய அறக்கட்டளை, எண். 415, கோட்டே வீதி, ராஜகிரிய.